## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்
## &
## இந்தியவானிலைத்துறை
## வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை
## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (08.02.2023 முதல் 12.02.2023 )

**அறிக்கைஎண் 0011/2023** **தேதி.7.02.2023**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 26°செ முதல் 32°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 26°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 13°செ முதல் 23°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 07°செ முதல் 11°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் மழை பெறப்படவில்லை.

**ஈரோடு மாவட்டத்தின் கடந்தவார வானிலை**

ஈரோடு மாவட்டத்தின் 03.02.23 முதல் 6.02.23 வரையிலும் பகல்நேர வெப்பநிலை 28°செ முதல் 33°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 18°செ முதல் 21°செ ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 83 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 20 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8-12 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவார வானிலை (3.02.2023 முதல் 06.02.2023) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 12.02.2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 03/01 | 04/02 | 05/02 | 06/02 | தேதி | நாள்-1 08/02 | நாள்-2 09/02 | நாள்-3 10/02 | நாள்-4 11/02 | நாள்-5 12/02 |
| 0.0 | 1.1 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 30 | 28 | 32 | 33 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 33 | 33 | 33 | 34 | 34 |
| 21 | 21 | 19 | 18 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 18 | 19 | 19 | 19 | 20 |
| 7 | 6 | 4 | 5 | மேக மூட்டம் (ஆக்டர்) | 3 | 3 | 2 | 2 | 2 |
| 71 | 83 | 83 | 58 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 80 | 70 | 60 | 50 |
| 72 | 44 | 20 | 22 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 30 | 30 | 20 | 20 | 20 |
| 8 | 11 | 12 | 8 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 4 | 6 | 8 | 6 | 8 |
| 20 | 90 | 140 | 90 | காற்றுவீசும் திசை | 50 | 70 | 90 | 70 | 70 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (08.02.2023 முதல் 12.02.2023)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலான மேக மூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33°செ முதல் 34°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 18°செ முதல் 20°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 20 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 4-8 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து வடகிழக்கு திசைவரை வீசக்கூடும்.

| ஈரோடு மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அம்மாபெட் | அந்தியூர் | பவானி | பவானிசாகர் | சென்னிமலை | ஈரோடு | கோபி | கொடுமுடி | மெடக்குறிச்சி | நம்பியூர் | பெருந்துறை | சத்தியமங்கலம் | தாளவாடி | டி.என்.பாளையம் |
| 08-02-2023 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 09-02-2023 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 10-02-2023 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 11-02-2023 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 12-02-2023 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| **பொது அறிவுரை** | | அடுத்த **5** நாட்களுக்கு குளிர்ந்த வறண்ட வானிலையுடன், காற்றின் வேகம் **4-10** கி.மீ வரை எதிர்பார்க்கப்படுபிறது. ஓரிரு இடங்களில் லேசான மழை பொழிய வாய்ப்புள்ளது.<br>வறண்ட வானிலை தொடர்வதால், மண் ஈரத்தினைப்பொறுத்து மாலையில் நீர் பாசனம் செய்யவேண்டும். பயிர்கழிவு மூடாக்கு இடுவதால் மண் ஈரத்தினைப் பாதுகாக்கலாம்.<br>அறுவடை முடிந்த பிறகு நிலத்தினை கொத்து அல்லது சட்டிக் கலப்பை கொண்டு உடனடியாக உழுவதன் மூலம் களைகளை கட்டுப்படுத்துவதுடன் கோடை கால மழையின் ஈரப்பத்ததை சேகரிக்கலாம்.<br>வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுவதால் அறுவடை செய்த தானியங்களை காயவைத்து தக்க முறையில் சேமிக்கவும். |
| நெல் | நடவு மற்றும் பால்பிடிக்கும் பருவம் பருவம் | நீர்ப்பாசனம் உள்ள இடங்களில் நவரை பருவ நெல் நடவினை நீர் மறைய நீர்கட்டு முறையுடன் மேற்கொள்ளவும்.<br>சம்பா நெல் பயிரில் தற்போது நிலவும் வானிலையால் கதிர் நாவாய் பூச்சி வர வாய்ப்புள்ளது. எனவே தாக்குதல் தென்பட்டால் டைகுளோர்வாஸ் என்ற மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு **2** மில்லி வீதம் தெளிக்கவும். |
| கரும்பு | நடவு | வறண்ட வானிலை நிலவுவதால் கரும்பில் இளங்குருத்து புழு வர வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் அடிக்கடி தண்ணீர் பாய்ச்சி வயலை நன்கு ஈரமாக வைத்துக்கொள்வதன் மூலம் இந்த தாக்குதலை குறைக்கலாம். மேலும் பயிர் மூடாக்கு செய்வதன் மூலமும் இந்த தாக்குதல் குறைவதோடு மட்டும் அல்லாமல் நீர் தேவையையும் குறைக்கலாம். |

| | | |
|---|---|---|
| கொடி வகை காய்கறி | பூக்கும் பருவம் | பெண் பூக்களை அதிகரிக்க கொடி வகை காய்கறி பயிரில் எத்ரல் 100 பிபிஎம் அதாவது 10 லிட்டர் தண்ணீரில் 1மில்லி கலந்து 15 நாட்கள் இடைவெளியில் நான்கு அல்லது ஐந்து முறை நிலத்தில் போதுமான ஈரம் இருக்கும் பட்டத்தில் தெளிக்கவும். |
| மஞ்சள் | கிழங்கு முதிர்ச்சி பருவம் | மஞ்சள் கிழங்கு முதிர்வடையும் நிலையில் இருப்பதால் இடைவெளியினை அதிகரித்து அளவான தண்ணீர் பாய்ச்சவும். |
| மரவள்ளி கிழங்கு | கிழங்கு பருக்கும் பருவம் | தற்போது நிலவும் வானிலையால் மரவள்ளி கிழங்கில் வெள்ளை ஈ தாக்குதல் வர வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் வயலை நன்கு கண்காணித்து தாக்குதல் தென்பட்டால் மஞ்சள் ஒட்டு பொறி வைத்து 5 அல்லது 6 இடங்களில் வைக்கவும். தேவைப்பட்டால் டையோசோபாஸ் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மில்லி அல்லது இமிடாகுளோரோபிட் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 0.6 மில்லி வீதம் கலந்து தெளிக்கவும். |
| தென்னை | | தென்னை மரத்தில் தற்போது நிலவும் சூழ்நிலையால் இலைகருகல் நோய் வர வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் மரத்தை நன்கு கண்காணித்து தாக்குதல் காணப்பட்டால் கார்பன்டசிம் என்ற மருந்தை 100 மில்லி தண்ணீருக்க 2 கிராம் என்ற அளவில் கலந்து வேர் மூலம் செலுத்தவும்.<br>தென்னையில் வெப்ப நிலை உயர்ந்து வருவதால் கருந்தலைப்புழு வர வாய்ப்புள்ளது. ஆரம்பகாலமாக இருந்தால் ப்ரொக்கானிஸ் என்ற ஒட்டுண்ணியை ஏக்கருக்கு 2100 என்ற அளவில் வைக்க வேண்டும். இந்த ஒட்டுண்ணி தென்னை ஆராய்ச்சி நிலையம் ஆழியார் நகரில் கிடைக்கிறது. தாக்குதல் அதிகமாக காணப்பட்டால் 10 மில்லி மேனோகுரோட்டோபாஸ் என்ற மருந்தை வேர் மூலம் செலுத்த வேண்டும். |
| கால்நடைகள் | | தற்போது நிலவும் வானிலையால் கறவை மாடுகளில் மடிவீக்க நோய் பரவ வாய்ப்புள்ளது. எனவே ஒரு சதம் பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசலைக் கொண்டு பால் கறப்பதற்கு முன்னும் பின்னும் மடியை சுத்தம் செய்யவும். |

**குறுஞ்செய்தி**

- மாலை நேர காற்றின் ஈரப்பதம் 30 சதவிகிதத்ததிற்கு குறைய வாய்ப்புள்ளதால் கால்நடைகளுக்கு நாவறட்சி ஏற்படாமல் இருக்க அடிக்கடி சுத்தமான குடிநீர் வழங்க வேண்டும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**